DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : STC **2122/2025** |
| Deposition of Witness for | : PW1 |
| Name | : ராமதுரை |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 08.08.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 08 August 2026**.**

**எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கொக்குகுளத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அது அ.சா.ஆ.1 ஆகும்.** புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்குத் தெரியாது. எதிரிகளுடன் சமாதனமாக சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் போலீசார் விசாரணையில் எனக்கும் எதிரிகளுக்கும் இடம் சம்மந்தமாக விற்பணை செய்வதில் முன்விரோதம் இருந்து வந்து அதன்தொடர்ச்சியாக கடந்த 13.06.2025 இரவு 7.30. மணிக்கு ஆஜர் எதிரி வயல்ராமன் எனக்கு போன் செய்து தான் பால்ராஜ் என்வரின் வீட்டில் இருப்பதாகவும், தைரியம் இருந்தால் வீட்டிற்கு வா என்று கூறியதன் அடிப்படையில் நானும் என் மனைவியும் பால்ராஜ் வீட்டிற்கு சென்ற போது அங்கு இருந்த எதிரிகள் எங்களை பார்த்து அசிங்கமாக பேசி மருதுபாண்டி கம்பாலான களைவெட்டி கனையால் எனது வலது கண் புருவம், இடது கண் கீழ், வலது முட்டிக்கு கீழ் அடித்து இரத்தக்காயம் ஏற்படுததினார் என்றும், வயல்ராமன், பால்ராஜ் கையால் எனது வலது கண்ணம், இடது கண்ணத்தில் அடித்தார்கள் என்றும்,அப்போது அருகில் இருந்த எனது மனைவி வசந்தாவும், இராமதுரைச்சியும், எதிரிகளை பார்த்து சத்தம்போட்டார்கள் என்றும் அப்போது எதிரிகள் மூவரும் எனக்கு கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், பின்பு அடிபட்ட என்னை என் மகன் உமேஸ்வரன் அடிபட்ட என்னை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார் என்றும், அங்கு வந்த அய்யாபுரம் போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவர்களுக்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

M MARI

Digitally signed by M MARI
Date: 2026.08.08 18:46:16 +0530